<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>
**OS** 199/2009

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 24.10.2025

Pw1 ( பிரேம்குமார் )

**குறுக்கு விசாரணை (10 ம் பிரதிவாதி தரப்பில்)**

நான் தாக்கல் செய்துள்ள தாவா வரைபடத்தில் சென்னிமலை கவுண்டர் பூர்வீக வகையில் பாத்தியப்பட்ட சொத்து, கிரய வகையில் பாத்தியப்பட்ட சொத்து மற்றும் குத்தகை வகையில் உள்ள சொத்தை பிரித்து காட்ட முடியுமா என்றால் என்னால் முடியாது. சென்னிமலை கவுண்டர் 24.06.1925 ல் ஒரு நல்லப்பகவுண்டர் த.பெ சென்னிமலை கவுண்டர்க்கு ஏக்கர் 95.14 கிரயம் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சாட்சியிடம் மேற்படி 24.06.1925 தேதிய கிரய ஆவணத்தை காண்பித்து கேள்வி கேட்டபோது சாட்சி ஆவணத்தை படித்துவிட்டு சரி என சொல்கிறார். அவ்வாறு விற்பனை செய்ததில் அவரது விஸ்தீரணம் 6.85 ஆக குறைந்துள்ளது என்றால் சரிதான். ஏக்கர் 31.31 ல் எல்பிபீ வாய்க்காலுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாய்க்காலுக்கு மேற்படி விஸ்தீரணம் ஏக்கர் 1.46 ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. ஏக்கர் 31.31 ல் வாய்க்கால் நீங்கலாக மீதமுள்ள ஏக்கர் 29.90 என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதில் சென்னிமலை கவுண்டருக்கு 1/4 பாகம் ஏக்கர் 7.47 என்றால் என் அப்பா சொல்லி கேள்விபட்டுள்ளேன். அந்த 7.47 ல் ஏக்கர் 95-1/4 விற்பனை செய்தது போக அவரிடம் மீதமிருந்தது 6.52-1/4 என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் சென்னிமலை கவுண்டர் தனிப்பட்ட முறையில் சொத்துக்களை கிரயம் பெற்றதாக வாதம் வைக்கவில்லை என்றால் சரிதான். ஏக்கர் 6.52-1/4 விஸ்தீரணம் தான் அவரின் 6 மக்களுக்கும் பிரியும் என்றால் சரிதான். அவ்வாறு பிரிக்கும்போது ஒவ்வொரு பாகஸ்தருக்கும் ஏக்கர் 1.08 கிடைக்கத்தக்கது என்றால் சரிதான். என் தாத்தா சுப்புராய கவுண்டர் ஏக்கர் 1.08 மற்றும் ஏக்கர் 0.70 (வாசாஆ 1) மற்றும் ஏக்கர் 1.00 (வாசாஆ 2) என 3 கிரயங்கள் மூலம் அவருக்கு கிடைக்கக்கூடிய மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 3.86 என்றால் சரிதான். மேற்படி 3 கிரயங்களும் எங்களுக்குள் உள்ள உறவினர்கள் தான்

கிரயம் கொடுத்துளளனர் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 5.08. ஏக்கர் 5.08 ஐ தான் வழக்குரை வரைபடத்தில் சிவப்பு நிறத்தில் காண்பித்துள்ளேன் என்றால் சரி. எனது மூதாதையர்கள் ராமகிருஷ்ண ஐயங்காரிடம் குத்தகை தாரராக இருந்ததாக வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் என் தகப்பனார் சொல்லி தெரியும். என் தகப்பனார் பெயர் தங்கராஜ். அவர் தான் முதல் வாதி. ராமகிருஷ்ண ஐயங்காருக்கு பாத்தியப்பட்ட ஏக்கர் 6.55 ஐ தான் 1 முதல் 8 பிரதிவாதிகள் கிரயம் பெற்றுள்ளனர் என்றால் சரிதான், ஆனால் அவர்கள் சுவாதீனத்தில் இல்லை. அந்த உரிமையை தான் ஜெயமுருகன் வாங்கியுள்ளார் என்றால் ஆவணத்தின்படி வாங்கியுள்ளார். ஜெயமுருகன் வாங்கிய 6.55 ஐ எனது வரைபடத்தில் எங்குள்ளது என என்னால் காட்ட முடியுமா என்றால் காட்ட முடியாது. 1 முதல் 8 பிரதிவாதிகளுக்கோ அல்லது ஜெயமுருகனுக்கோ குத்தகை தொகை கொடுத்துள்ளோமா என்றால் இல்லை. வழக்குரையில் ராமகிருஷ்ண ஐயங்காரின் சொத்திற்கு தாவா தாக்கல் செய்யும் முன்பு வரை குத்தகை தாரர் என ஒப்புக் கொண்டுள்ளோம் என்றும் முதல் விசாரணையிலும் அவ்வாறு தான் சொல்லியுள்ளேன் என்றால் சரி. எந்த சொத்திற்கு குத்தகை தாரர் என ஒப்புக்கொண்டுள்ளேனா அந்த சொத்திற்கு நான் சொத்தின் உரிமையாளராக விளம்புகை கோரி வழக்கை முன்வைக்க முடியாது என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.10.24 15:57:02 +0530

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS